தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தி. பி. 2020 மடங்கல் (15-9-1989) ஓர் உருபா (இதழ் எண்: 128)

அரசியல் நல உரிமைகளைச் செய்வதற்கு யாருமே வருவர்! திறம்படவும் செய்வர்!

இன நல உரிமைகளை மீட்பதற்கே தந்நலமற்ற நல்ல தலைவர் வேண்டும்!

விட்டுக் கொடுக்கப்படும் ஒவ்வோர் உரிமையும் தமிழினத்தை மாற்றார்க்கு அடிமைப் படுத்தும் இரண்டகச் செயலே!

திராவிடர் முன்னேற்றக் கழகத்தை முதலில் தமிழர் முன்னேற்றக் கழகமாக மாற்றுதல் வேண்டும்!

தூங்கற்க தூங்காமல் செய்யும் வினை!

பள்ளிப் பிள்ளைகளுக்குச் சோறு, முட்டை தருதல், ஏழைகளுக்குத் துணிகள் உதவுதல், திரைப்பட உரையாடல் எழுதுதல் அல்ல, தமிழினத்தை முன்னேற்றும் செயற்பாடுகள்!

(தொடர்ச்சி 3-ஆம் பக்கம்)

பறம்பை அறிவன் பக்கம்!

தமிழ்க்குடிமகன் 'பார்வை'யில் பாரதியும், 'தாசனும்'!

அறிஞர் 'விவேகி' கூறிய நினைவு நெஞ்சில்...

'பார்ப்பன'' !மேல்தட்டு'ச் சாதியினர், 'பாரதி' என்று தம்மைப் பாராட்டிக் கொள்வர். 'சூத்திரன்' தான் என்று தன்னைத் தாழ்த்திக் கொள்வான் 'தமிழன்'. இதற்குப் புரட்சிப் பாவலர் சுப்புரெத்தினமும் நெறிவிலக்கன்று. எனவே, அவர் 'தாசன்' ஆனார்!

அன்றைய சூழலில், பார்ப்பனத் தமிழன் 'பாரதி', 'நந்தனைப் பார்ப்பான்' என்று பாடினான். 'இந்திய விடுதலை'க்கு அணி திரட்டிய காலம் அன்றோ? ஆகவே, வரலாற்றுக் கட்டாயம், 'பாரதி' வழி பேசுகின்ற புரட்சியைக் கேட்க முடிந்தது.

பாரதியைக் 'குரு'வாக ஏற்றுப் புரட்சிப் பாவலர் தம்மை அவரது தாசனாகக் கருதி வந்தார்! இந்த 'வரலாற்றுப் பிழை' இன்றும் தொடர்கின்றது!

அறிஞர் 'விவேகி',யின் பகுத்தறிவு நோக்கில் சுட்டிக் காட்டி இடித்துரைத்த பிறகு, 'பாரதிதாசன்' என்று தம்மைக் கூறிக் கொண்ட 'கருத்துப்பிழை'யினை ஒப்புக் கொண்டிருக்கிறார் புரட்சிப் பாவலர்!

தமிழ்க்குடிமகன் கூறியதென்ன?

''பாரதிதாசன், பாரதியின் தோள்களில் நின்று குமுகாயத்தைப் பார்த்தார்'' — தினமணி 13-9-89.

'பாரதி' — ஒரு குமுகாயப் படைப்பு —
'பாரதிதாசன்' — ஒரு குமுகாயப் படைப்பு.

இரண்டு வேறுபட்ட காலச்சூழல், வரலாற்றின் தொடர்ச்சி இரண்டையும் எண்ணிப் பார்த்தல் வேண்டும்!

தோளில் ஏறிப் பார்க்கும் 'சிறுபிள்ளை'யன்று 'பாரதி தாசனார்! தோளில் ஏற்றித் தூக்கித் திரிந்தவரும் அல்லர் பாரதியார்!

பாரதியின் உரைநடையில் மொழி, இன, நாட்டுணர்ச்சி அதிகமிருப்பதாகத் தமிழ்க்குடிமகனார் கூறியிருக்கிறார். இந்த ஆராய்ச்சி ஒருபுறமிருக்கப் 'பாரதிதாசனி'ன் தனித்தன்மையை அவரது பரம்பரையை, இனவிடுதலைக் குரலை, பாரதியின் தோளில் ஏற்றி, இந்திய தேசிய ஒருமைப்பாட்டில் உறைந்து போகும்படி விட்டுவிட முயல்கிறார்!

இன்றைய வரலாற்று வளர்ச்சியைத் தமிழ்க்குடிமகன் பார்க்க மறுக்கின்ற — புறக்கணிக்கின்ற இயக்க மறுப்பியலாளராக உள்ளார் என்றே கருதத் தோன்றுகின்றது.

கல்விநலச் சிந்தனைகள்!

கல்வியாளர்களே, 'பொறுத்திருங்கள்' என்று பசியோடுள்ள நமக்கு அறிவுரை சொல்கிறவர்களை அறிவோம். பசியின் கொடுமையைவிட நெருப்பில் நிற்பதன்று — தூங்கவே செய்யலாம் என்பதை நாம் அறிவோம். ஆனாலும், அறிவுரைக்குப் பஞ்சமில்லை.

93 அகவை உள்ளவர் இத்தாலி நாட்டுக்காரர் — பெயர் ஆடிட்டோ டிசியோ. எட்டா உச்சியான பனிமலையின் கொடுமுடி — எவரெசுட்டில் ஏறுகிறார் என்ற செய்தியைப் பார்த்ததும் ஊக்கம் எழுகிறது.

தொடக்கக் கல்விக்குச் செலவிடும் தொகை மிகக் குறைவு. ஊழியர்களின் ஊதியம், முகவர்களின் (தரகுத் தொகை!) செலவுகளைக் 'கல்விச் செலவு' என்று கொள்ளலாமா! மாணவர்களின் அறிவு முயற்சிக்காக 'அரசு' செலவிடுவது குறைவு என்றே தோன்றுகிறது. சாரவுணவு, முட்டை போடுதல், சீருடை தருதல் என்பதெல்லாம் விளம்பர வீணடிப்புகளாகப் போவதையும் நாம் மறந்து விடுதல் இயலாது!

கற்பித்தலுக்கான உதவிப் பொருள்கள், கல்விச் சுற்றுலா, நூலகம், தேடலுக்கான ஊக்குவிப்புகள் இல்லாமல் கல்வி கரடு தட்டிப் போய் விடும். இதனை உணர்ந்து ஆசிரியர் மாணவர் இயக்கங்கள் கல்வி பற்றிய தொலைநோக்குடன் போராட்டம் செய்தல் வேண்டும்.

பத்தோடு பதினொன்றுதான்!

பள்ளி மாணவர்களுக்கு நண்பகல் உணவு மட்டுமின்றிக் காலை உணவும் வழங்குவது பற்றிப் புதுவை அரசு எண்ணி வருவதாகக் கல்வி அமைச்சர் சேசப் மரியதாசு தெரிவித்துள்ளார்.

இச் செய்தியை மற்ற 'மாநில அரசுகளும்' பின்பற்றக் கூடும், மாணவர்கள் நலத்தின் அக்கறை காட்டும் நம் அரசுகள் அவர்களின் எதிர்காலத்தைச் சுமையாக்கும் பாடத் திட்டங்கள் பற்றிக் கவனம் கொள்ளும் என எதிர்பார்ப்போம்!

முகப்பேரில் தமிழ்நாடு ஆரிய சமாசக் கல்விச் சங்கக் கூட்டமொன்றில் முதல்வர் கருணாநிதி பேசிய உரை சிந்திக்கத் தூண்டுவதாக உள்ளது. அவர்தம் பேச்சிலிருந்து பெற்ற கருத்துகள் வருமாறு:

(1) சில தனியார்கள் கல்வியை வணிகமாக்கும் நோக்குடன் 'தன்னாட்சிக்-(இதனைச் 'சுயநிதி' என்று கூறுவது பொருளுடையதாகாது —) கல்வி நிறுவனங்களை நடத்துகின்றனர். எதிர்காலத் தலைமுறையைத் தாக்கும் இந்தப் போக்கைத் தடுத்து நிறுத்தல் வேண்டும்

(2) சில 'தன்னாட்சி'ப் பொறியியல் கல்லூரிகளில் எந்த வகை ஏந்துமின்றி, ஆசிரி-

(தொடர்ச்சி 11-ஆம் பக்கம்)

1-ஆம் பக்கத் தொடர்ச்சி)

தமிழைப் படிப்பித்தல், தமிழின வரலாற்றைக்கற்பித்தல், தமிழின அடிமை நீக்குதல்-இவையே செய்யத்தக்கவை!

தமிழக ஆட்சியாக இருந்தால் மட்டும் போதாது; தமிழின நல ஆட்சியாக இருத்தல் வேண்டும்

திராவிட முன்னேற்றக் கழகம் குறிப்பாகக் கலைஞர் தமிழகத்தில் ஆட்சிக்கு வர வேண்டும் என்று யாவரினும் மேலாக, நாம் விரும்பினோம்; எதிர்பார்த்தோம், எழுதினோம்; பேசினோம்! யாரும் எதிர்பாராத வகையாக, ஏன், அவர்களே எதிர்பார்க்காத வகையில், அக்கழகம்—கலைஞர்—மீண்டும் ஆட்சிக்கு வந்தார். அதில் நமக்கு இரட்டை மகிழ்ச்சி! அதே போல் முன்னைவிட இத் தமிழினத்திற்கு இரட்டைப் பயன் கிடைக்கும் என்று எதிர்பார்த்தோம். ஆனால் நாம் எண்ணியது, எதிர்பார்த்தது நடைபெறவில்லை. அதில் நமக்குப் பெருத்த ஏமாற்றம்; பெரிய இழப்பு!

வழக்கம் போல் தி.மு.க. தன் விளம்பரத்தனமான, ஆரவாரத்தனமான அரசியலையே நடத்துவதிலும், தன் கட்சிக்கு மட்டும் ஊதியம் வரும் நன்மை தரும் செயற்பாடுகளிலேயே ஈடுபடுவதிலும் இன்று வரை கவனம் செலுத்தி வருகிறது! அடுத்த படி மீண்டும் பதவிக்கு வருகின்ற கரவான செயல்களையே திட்டமிட்டுச் செயற்படுத்தியும் வருகிறது. இதைப் பார்ப்பனரும் கூட ஒரு வகையில் பாராட்டவும் செய்கின்றனர்; மறுப்பதற்கில்லை.

பள்ளிப் பிள்ளைகளுக்கு உணவளிப்பது, உடை தருவது; பெண்களுக்குச் சொத்துரிமை வழங்குவது ஏழைப் பெண்டிர்க்கும், ஏதிலியான மகளிர்க்கும் உதவித் தொகைகள் தருவது, ஏழை எளிய கூலித் தொழிலாளர்கள் இறந்து போனால் உதவியளிப்பது முதலிய செயல்கள் அரசியல் முறையில் பாராட்டத் தகுந்த செயல்களே! ஆனால், வரலாற்றடிப்படையில், தமிழின முன்னேற்ற முயற்சிகளில் இவையெல்லாம் போதுமான செயல்களல்ல; நம் இனத்துக்கான உரிமைகளை மீட்டுத்தரும் செயற்பாடுகளும் அல்ல. இவ் வரசியல் நலந்தரும் உரிமைகளை-செயல்களைச் செய்வதற்குத் திறமையுடையவர்கள் யாருமே ஆட்சிக்கு வருவர்; இவற்றை விடத் திறம் படவும் செய்வர். கடந்த காலத்தில் இருந்த பேராயக் கட்சி ஆட்சியில் திருவாளர்கள் காமராசரும், பக்தவத்சலமும் அவர்களைப் போலும் அக்கட்சியிலிருந்த திரு. சுப்பிரமணியம் போலும் வேறு தலைவர்கள் சிலரும் கூட மக்கள் நலச் சிந்தனைகளை உடையவர்களாகவே இருந்தனர்; அவற்றைச் செயற்படுத்தியும் காட்டினர். அவையே ஒரு நல்லாட்சி அமைப்புக்குப் போதுமானவையாகவும் இருக்கலாம்.

ஆனால், தமிழகத்தைப் பொறுத்த அளவில், தமிழினத்தைப் பொறுத்த அளவில், வெறும் அரசியல் நலச் சிந்தனைகளே, செயற்பாடுகளே போதுமானவையாக இருந்து விட முடியா! இவ்வின முன்னேற்றத்திற்கென்று திட்டமிட்ட செயற்பாடுகளைக் காலத்தால் நிகழ்த்தியாகவேண்டும்!

'தமிழாய்ந்த தமிழன்தான் தமிழகத்தின் முதலமைச்சாய் வருதல் வேண்டும்' என்று பாவேந்தர் **பாரதிதாசன்** கூறினாரெனில், அதை வெறும் சொல்லளவில் மேலோட்டமாகப் பொருள் பண்ணிக் கொண்டு, கலைஞர் கருணாநிதிதாம் அதற்கு ஏற்றவர்; தகுதியானவர்; எனவே பாவேந்தர் கனவு நனவாகி விட்டது என்றெல்லாம், தங்கள் முதுகில் தாங்களே தட்டிக் கொடுத்துக் கொள்ளும் சிற்றறிவுச் சிறுமையாசைகளுடன் நிறைவடைந்து விடுமாறு, நம் இனநிலைத் தேவைகள் இல்லை. செயற்கரிய செய்வன எவை எனவும், செய்யாமையான் கெடும் செய்தக்க எவை எனவும் தீவிரமாகச் சிந்தித்து அவற்றிற்கேற்றபடி செயல்படும் செயல் மறவர்களே-நிலையான-இழந்து போன—உரிமைகளை மீட்பதற்குரிய, தந்நலமற்ற, தருக்குணர்வற்ற தலைவர்களே—இக்கால் தமிழராட்சிக்குத் தலைவராக வருதல் வேண்டும் என்பதே பாவேந்தர் பாரதிதாசனாரின் உள்ளக் கிடக்கை! அந்தப் பொருளைத்தான் அப்பாட்டின் அடி நமக்கு நினைவூட்டிக் கொண்டுள்ளது.

இற்றை நிலையில் நாம் இன்று தில்லியரிடம் விட்டுக் கொடுக்கும் ஒவ்வோர் உரிமையும் தமிழினத்தை மாற்றார்க்கு அடிமைப் படுத்தும் ஒவ்வோர் இரண்டகச் செயலே! அந்த வகையில் பார்த்தால், முதலில் நாம் திராவிடர் எனும் நினைவை அறவே கைவிட்டு விட்டு முழுக்க முழுக்க தமிழர் எனும் எண்ணத்தில் பாடாற்றுதல் வேண்டும். அது போலவே திராவிடர் முன்னேற்றக் கழகத்தையும் தமிழர் முன்னேற்றக் கழகமாக மாற்றியமைத்தல் வேண்டும். இதில் சட்டச் சிக்கலோ மானம் பார்த்தலோ ஒன்றுமே இல்லை.

அத்துடன் பள்ளிப் பிள்ளைகளுக்குத் தமிழைப் படிப்பித்தல், தமிழின வரலாற்றைக் கற்பித்தல், தமிழின அடிமை நீக்கும் செயல்களைத் துணிவுடன் செய்தல் முதலியவையே கலைஞர் செய்யத்தக்கவை! தமிழக ஆட்சியாக இருந்தால் மட்டும் போதாது. தமிழின நல ஆட்சியாகவும் இருத்தல் வேண்டும். கலைஞரும் திராவிட முன்னேற்றக் கழகப் பொறுப்பாளர்களும் இவ்வகையில் தீவிரமாகச் சிந்திக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்! O

Scanned with CamScanner

குட்டக் குட்டக் குனிந்து கொடுத்தால்...

தஞ்சை நலங்கிள்ளி, அமெரிக்கா.

''குட்டக் குட்டக் குனிந்து கொடுத்தால் குட்டுபவன் குட்டிக் கொண்டேயிருப்பான். காலம் போகப் போகக் காலால் எட்டி உதைக்கவும் செய்வான். குட்டக் குட்டக் குனிந்து கொடாமல் அதனைத் தட்டிக் கேட்டுத் தடை போடுவதே நாளடைவில் நலம் பயக்கும்.''

சில நாட்களுக்கு முன் நான் ஒரு நாடகம் பார்க்க நேர்ந்தது. அந்நாடகத்தின் கதை வருமாறு. ஐந்து அகவைச் சிறுவனொருவன், இலாரன்சு (Lawrence) என்று பெயர். முதல் முதலாகப் பள்ளிக்குச் செல்கிறான். நடுப்பகல் உணவுக்குப் பின் குளிர் குடிப்பு (cool drink) வாங்கிச் சாப்பிடுவதற்கெனத் தாயார் அவனிடம் 50 காசு கொடுத்தனுப்புகிறாள். மதிய உணவின்போது அப்பள்ளியிலுள்ள முரட்டுச்சிறுவனொருவன், ''நீ வைத்திருக்கும் காசில் பாதியை என்னிடம் கொடுக்கா விட்டால் உன்னை அடித்து உதைத்து விடுவேன்'' என்று மிரட்டுகிறான். இலாரன்சு பயந்துப் போய் பாதிப் பணத்தைக் (25 காசு) கொடுத்து விடுகிறான். முரட்டுச் சிறுவன் ''நடந்ததை ஆசிரியர்களிடமோ, பெற்றோரிடமோ சொல்வாயானால் உன்னைப் படாத பாடு படுத்துவேன்'' என மிரட்டி விட்டுச் செல்கிறான். இது நித்தம் நித்தம் நடந்து வருகிறது. இரண்டு மூன்று திங்களுக்குப் பின் அந்த முரட்டுச் சிறுவன் '25 காசுகள் போதாது, இனிமேல் 30 காசுகளை எனக்குக் கொடுத்து விட வேண்டும்'' என்கிறான். இலாரன்சு மறுக்கிறான். சினங் கொண்ட முரட்டுச் சிறுவன் இலாரன்சுக்கு நன்றாக அடி கொடுத்து விட்டு, 30 காசுகளைப் பறித்துச் செல்கிறான். அடுத்த நாள் அஞ்சிப் போய் இலாரன்சு 30 காசுகளைக் கொடுத்து விடுகிறான். இவ்வாறு ஆண்டு முழுவதும் நடக்கிறது. அடுத்த ஆண்டு பள்ளி திறக்கிறது. முரட்டுச் சிறுவன் இலாரன்சிடம் 35 காசுகள் கேட்கிறான். இலாரன்சு மறுக்கவே, அவனுக்கு நன்றாக அடி கொடுத்து விட்டு 35 காசுகளைப் பறித்துச் செல்கிறான். ''இனிமேல் இவனை எதிர்த்து நிற்காவிட்டால், ஆண்டு முழுவதும் நம்மிடமிருந்து பணத்தைப் பிடுங்கி விடுவான்'' என்று உணர்ந்த இலாரன்சு, கராத்தே (Karate) என்ற கைச் சண்டையைக் கற்றுக் கொள்கிறான். இரண்டு கிழமைகள் கழிகிறது. இரண்டு கிழமைகளாகக் கராத்தே (Karate) கற்றுக் கொண்ட பின், முரட்டுச் சிறுவனுக்கு 35 காசுகளைக் கொடுக்க மறுக்கிறான். இருவருக்கும் சண்டை நடக்கிறது. இருவரும் ஒருவரையொருவர் அடித்துக் கொள்கிறார்கள். முடிவில் முரட்டுச் சிறுவன் வெற்றி பெற்று 50 காசுகளையும் பிடுங்கிக் கொண்டு செல்கிறான். அடுத்த நாளும் அதே கதைதான். இலாரன்சு காசு கொடுக்க மறுக்கிறான். இருவரும் ஒருவரையொருவர் அடித்துக் கொள்கிறார்கள். முரட்டுச் சிறுவன் 50 காசுகளையும் பறித்துச் செல்கிறான். இந்நிலை ஏழெட்டு நாள்களாகத் தொடர்கிறது. இலாரன்சு முரட்டுச் சிறுவனிடமிருந்து பத்து அடி பட்டால், **திரும்ப ஐந்து அடியாவது கொடுக்கத் தவறுவதில்லை.** இந்நிலையை உணர்ந்த முரட்டுச் சிறுவன், இனியும் தொடர்ந்து இலாரன்சிடம் சண்டை போட்டு அடி படுவது வேண்டாத தொல்லை எனக் கருதி இலாரன்சிடம் காசு கேட்பதை நிறுத்தி விடுகிறான். இலாரன்சு தன் தாய் கொடுக்கும் 50 காசுகட்கும் குளிர் குடிப்பு (cool drink) வாங்கிக் குடித்து மகிழ்கிறான். அவனுடைய பள்ளி நாள்கள் அமைதியாகக் கழிகின்றன.

இந்நாடகம் தரும் பாடம் என்ன? ''குட்டக் குட்டக் குனிந்து கொடுத்தால் குட்டுபவன் குட்டிக் கொண்டேதான் இருப்பான். காலம் போகப் போகக் காலால் எட்டி உதைக்கவும் செய்வான். குட்டக் குட்டக் குனிந்து கொடாமல், அதனைத் தட்டிக் கேட்டுத் தடை போடுவதே நாளடைவில் நலம் பயக்கும்.''

மேற்கூறிய பாடம் தனி மாந்தரின் வாழ்க்கைக்கு மட்டுமன்று, ஓர் இனத்தின் அல்லது ஒரு நாட்டின் வாழ்வு முறைகட்கும் பொருந்தும். ஓர் இனம் மற்றோரினத்தை அடிமைப் படுத்துவதும், ஒரு நாடு மற்றொரு நாட்டை அடிமைப் படுத்துவதும் மாந்த வரலாற்றின் தொடக்கக் காலத்திலிருந்தே நடைபெற்று வருகிறது. **அடிமைப்பட்ட இனம் அமைந்து கிடந்து அவ்வடிமைத் தனத்தை ஏற்றுக் கொள்ளுமேயானால், அவ்வினம் படிப்படியாக நசுக்கப் படுவதும், அடிமைப்பட்ட இனம் அவ்வடிமைத் தனத்தை எதிர்த்துப் போரிடுமேயானால், நாளடைவில் அடிமை விலங்கை அறுத்தெறிவதும் வரலாறு காட்டும் உண்மை.**

இந்நூற்றாண்டின் தொடக்கத்தில், துருக்கி (Turkey) நாட்டில் வாழ்ந்த ஆர்மேனிய இனத்தவர் (Armenians) கொடுமைப் படுத்தப் பட்டுப் பின்னர் அழிக்கப்பட்ட வரலாற்றைப் பார்ப்போம். ஆர்மேனிய மக்களின் முன்னைய வரலாறு மிகப் பெருமையுடையது. ஈராயிரம் ஆண்டுகட்கு முன்னால் ஆர்மேனியப் பேரரசு ஐரோப்பாவிலேயே மிக வன்மை வாய்ந்ததோர் அரசாக விளங்கியது. அப்பேரரசு வீழ்ச்சியடைந்த பின், ஆர்மேனிய மக்கள் பிற இனத்தவருக்கு அடிமைப் படலாயினர்.

Scanned with CamScanner

இந்நூற்றுண்டின் (20 ஆம் நூற்றுண்டு) தொடக்கத்தில், ஆர்மேனிய நாட்டின் ஒரு பகுதி உருசியராலும் மற்றொரு பகுதி துருக்கியாலும் ஆளப்பட்டது. உருசியாவிலும், துருக்கியிலும் ஆர்மேனியர் மூன்றாந்தர மக்களாக நடத்தப் பட்டனர். ஆர்மேனிய மக்கள் துருக்கி அரசரால் மிகவும் கொடுமைப் படுத்தப் பட்டனர். ஆர்மேனிய மக்களின் வரிப்பணம் துருக்கியரின் நலனுக்காகப் பயன்படுத்தப் பட்டது ஆர்மேனியரின் பழமை வாய்ந்த கலைகளும், பண்பாடுகளும், மொழியும் நசுக்கப் பட்டன. அவ்வப்போது ஆர்மேனியத் தலைவர்கள் இடும் முறையீடுகள் குறித்துத் துருக்கிய அரசு எவ்வகை நடவடிக்கையும் எடுக்கவில்லை. மேலும் மேலும் ஆர்மேனிய மக்கள் ஓர் அடிமை இனமாகவே நடத்தப் பட்டனர். ஒவ்வொரு கால், இக் கொடுமைகளைப் பொறுக்காத ஆர்மேனிய இளைஞர்கள் கருவியேந்திப் போரிட முனைந்தபோது துருக்கியரசு ஆர்மேனியத் தலைவர்களைக் கூப்பிட்டு எச்சரிக்கும். ஆர்மேனியத் தலைவர்களும் துருக்கியரசுடன் சண்டை போடுவதால் ஏற்படவிருக்கும் உயிரிழப்புகளையும், பொருளிழப்புகளையும் கருதி, கருவியேந்திப் போரிட முனைந்த இளைஞர்களைச் செயல்பட விடாமல் தடுத்தனர். கருவியேந்திய மறத்தின் பாற்பட்ட ஓர் இனமீட்சிப் போரில் (விடுதலைப் போரில்) ஆர்மேனியர் ஈடுபடவில்லை. இஃதிவ்வாறிருக்க, ஏறத்தாழ 70 ஆண்டுகட்கு முன், ஆர்மேனிய மக்கள் துருக்கி நாட்டின் பாதுகாவலுக்கு (security of Tvrkey) இடைஞ்சலாயிருக்கிறார்கள் எனக் கூறி, துருக்கியரசு ஆர்மேனிய மக்களை அவர்கள் காலங் காலமாகக் குடி வாழ்ந்து வந்த வளமான பகுதிகளிலிருந்து இடம் பெயர்த்து, வறட்சியான பாலைநிலப் பகுதிகளில் குடியேற்றத் திட்டமிட்டது. துருக்கியரசின் படைகள் ஆர்மேனிய மக்களை அவர்களின் வீடுகளிலிருந்து வெளியேற்றிப் பாலைநிலப் பகுதிகட்கு அழைத்துச் சென்றனர். சற்றே தூரம் சென்றதும், ஆர்மேனியரின் நகை, பணங்களைப் பறித்ததுடன், துருக்கிப் படையாளர்கள் எவ்வகைக் காரணமுமின்றி ஆண்களனைவரையும் படுகொலை செய்தனர். இளம் பெண்கள் பலர் முரட்டுத்தனமாகக் கற்பழிக்கப் பட்டனர். பல நூறு கற்கள் தொலைவு பயணம் செய்கின்ற ஆர்மேனியப் பெண்களுக்கும், குழந்தைகட்கும் உணவுக்கான ஏற்பாடுகள் ஏதும் துருக்கியரசு செய்யாததால், பசியாலும், களைப்பாலும், நோயாலும் பல்லாயிரக் கணக்கான ஆர்மேனியப் பெண்களும் குழந்தைகளும் செத்தனர். துருக்கியிலிருந்து தப்பி ஓடிய ஆர்மேனியர் இன்று பிற ஐரோப்பிய நாடுகளிலும், அமெரிக்காவிலும் வாழ்கின்றனர். இந்நூற்றுண்டின் தொடக்கத்தில் ஏறத்தாழ முப்பது இலக்கம் ஆர்மேனியர் துருக்கியில் வாழ்ந்தனர். இன்று அவர்களின் எண்ணிக்கை ஏறத்தாழ அரை இலக்கம் எனக் கருதப் படுகிறது. "குட்டக் குட்டக் குனிந்து கொடுத்தால், குட்டுபவன் குட்டிக் கொண்டேயிருப்பான், காலஞ் செல்லச் செல்லக் காலால் எட்டி உதைத்கவும் செய்வான்" என்பதற்கு ஆர்மேனிய இனத்தவரின் துயர வரலாறு ஓர் எடுத்துக் காட்டாகும்.

இனி அமெரிக்க நாட்டின் வரலாற்றைப் பார்ப்போம். ஏறத்தாழ இருநூறு ஆண்டுகட்கு முன்னால், அமெரிக்கா இங்கிலாந்து நாட்டின் அடிமையாக இருந்தது. அமெரிக்க மக்கள் செலுத்திய வரிப் பணங்கள் இங்கிலாந்துக்குச் சென்று, இங்கிலாந்து நாட்டு மக்களின் வாழ்க்கையை வளப்படுத்தியது. அமெரிக்காவின் இயற்கை வளங்கள் இங்கிலாந்துக்குக் கொண்டு செல்லப்பட்டு, இங்கிலாந்து நாட்டின் தொழிலாளிகளையும், முதலாளிகளையும், வணிகர்களையும் வளப்படுத்தியது. இங்கிலாந்து நாட்டில் செய்யப்படும் பொருள்களுக்கு அமெரிக்கா சந்தையாக மாறியது. இவ்வகையிலும் இங்கிலாந்தின் முதலாளிகளும், வணிகர்களும் கொழுத்தனர். மாறாக, அமெரிக்க முதலாளிகளும், வணிகர்களும், தொழிலாளிகளும் இரண்டாந்தர நிலைக்கு மாற்றப் பட்டனர். இவ்வடிமை நிலையைக் கண்டு பொறுக்காத, விடுதலையுணர்வு கொண்ட அறிஞர்களும், வீர உணர்வு கொண்ட மறவர்களும் கருவியேந்திப் போராடத் தொடங்கினர். அக்காலத்தில் (இருநூறு ஆண்டுகட்கு முன்னால்) இங்கிலாந்து உலகிலேயே மிகவும் வலிமை வாய்ந்த பேரரசாக விளங்கியது. அது தன் படை வலியால் பல்வேறு நாடுகளைத் தனக்குக் கீழ்ப்படுத்தி வைத்திருந்தது. அப்பேர்ப் பட்ட பேரரசின் பெரும்படையை எதிர்த்துப் போராட முற்பட்டது அமெரிக்க விடுதலைப் படை. முதலில் தோல்விகள் பல ஏற்பட்டாலும், நாளடைவில் அமெரிக்க விடுதலைப் படை இங்கிலாந்தின் படையைத் தோற்கடித்தது. அமெரிக்கா விடுதலை பெற்றது. இன்று அமெரிக்கா முழு உரிமை கொண்ட விடுதலை பெற்ற நாடாக மட்டுமல்லாது, இங்கிலாந்து நாட்டைவிடப் பொருள வளமும், படை வலியும் மிக்க உலகப் பேரரசாகத் திகழ்கிறது. "குட்டக் குட்டக் குனிந்து கொடாமல், அதனை தட்டிக் கேட்டுத் தடை போடுவதே நாளடைவில் நலம் பயக்கும்" என்பதற்கு அமெரிக்க விடுதலைப் படையின் வீர வரலாறு நல்லதொரு சான்று.

இன முயற்சிகளில் ஈடுபடும் அறிஞர் பெருமக்களும், அரசியல் தலைவர்களும், அரசியல் தொண்டர்களும், வினைமுனைப்புள்ள இளைய தலைமுறையும் வரலாறு தரும் பாடங்களை நினைவில் நிறுத்திக் கொள்ளுதல் வேண்டும் O

Scanned with CamScanner

எதிர்க் கட்சிகளின் முழு அடைப்பு வெற்றியா? தோல்வியா?

கடந்த ஆகத்து 30-ஆம் பக்கல் இந்தியா முழுவதும் எதிர்க் கட்சிகள் முழு அடைப்பு (பந்து) செய்ய ஏற்பாடு செய்திருந்தன.

இராசீவ் அரசில் ஏற்பட்ட ஊழல்கள்: போஃபர்சு தகரி (பீரங்கி)கள் வாங்கியதில் ஊழல்; மேற்கு செருமனியிலிருந்து நீர் மூழ்கிக் கப்பல் வாங்கியதில் ஊழல்; அமிதாப்பச்சனும் அவர் தம்பியும் நடத்திய பெரும் ஊழல்கள்; சப்பானி-லிருந்து எண்ணெய் தருவித்ததில் ஊழல்கள்; ரிலையன்சு குழுமத்திற்கு அளித்து வரும் சட்டத்-திற்குப் புறம்பான சலுகைகளில் ஊழல்; பல வகையான ஊழல் குற்றம் சுமத்தப் பட்டும், இந்திரா காந்தி கொலை வழக்கில் தொடர்பு படுத்தப் பட்டும் இருந்த நடுவணரசு முன்னாள் அமைச்சர் தவனை மீண்டும் அமைச்சராக்கிய கொடுமை என்ற வகையில் பலவாறான ஊழல் குற்றச் சாட்டுகளை எதிர்க் கட்சிகள் இராசீவ் அரசின்மேல் சாட்டியிருக்கின்றன.

இவற்றோடு இராசீவ் அரசு குடிநாயக மரபுகள் அனைத்தையும் புறக்கணித்தவாறு, கருப்புச் சட்டங்களால் மக்களைக் கொடுமையாகவும் கடுமை-யாகவும் அடக்கி ஆளும் போக்கு!

மற்றும் நடுவண் அரசு, உசாவலுக்கு உட்படுத்திய தக்கர் குழு, மண்டல் குழு, குடால் குழு ஆகிய உசாவல் குழுக்களின் அறிக்கைகளை இராசீவ் பாராளுமன்றத்தில் வைக்காமல் மூடி மறைத்து வரும் புறக்கணிப்பு!

இவற்றுடன், ஆளுங்கட்சியாகிய இராசீவின் இந்திராக் கட்சிக்கு எதிராகக் கருத்துக் கூறுப-வர்களை அடக்கி, ஒடுக்கி, அழித்து வரும் நேர்மை-யற்ற அரசியல் போக்குகள், நடுவண் புலனாய்வுத் துறையைக் கையில் போட்டுக் கொண்டு, அதன் ஊழல் மிகுந்த தலைவர் காத்ரேவுக்குப் பெருத்த ஆதரவு காட்டி, அத்துறை கொடுத்த புலனங்களை வைத்துக் கொண்டு, அரசு தனக்கு ஆதரவாக உள்ளவர்களுக்குப் பாதுகாப்பாகவும், எதிராகச் செயல்படுபவர்களுக்கு மாறாகப் பல வகையிலும் தொல்லைகள் கொடுப்பதும், கொடுமைகள் செய்வது-மான போக்கு!

இவற்றைக் கண்டித்து நூற்றுக்கு மேலான பாராளுமன்ற உறுப்பினர்கள் பதவி விடுப்புச் செய்து, உலக அரசியலில் எங்கும் நடந்திராத கண்டனத்தைத் தெரிவித்தும், அதைப் பொருட் படுத்தாமல் ஆடாமல் அசையாமல் இராசீவ் தம் பதவியைக் காத்துக் கொள்ளும் அனைத்ததிகார வல்லரசியப் போக்கு!

—இவையனைத்தையும் கடுமையாகக் கண்ட-னம் செய்வதும், இச்செயல்களை மக்கள் மன்றத்-திற்கு எடுத்துச் சென்று இராசீவ் அரசின் ஊழல்க-ளையும் தவறான போக்குகளையும் விளங்கச் செய்-வதும் ஆன நோக்கத்துடன்தான், வேறு வழியில்-லாமல், எதிர்க் கட்சிகள் இந்தியாவின் முழு அடைப்புக்கு ஏற்பாடு செய்து, இராசீவ் அரசு பதவியிறங்க வேண்டும் என்னும் கோரிக்கையை-யும் முன் வைத்து இந்த முழு அடைப்புக்கு ஏற்-பாடு செய்திருந்தது.

எதிர்க் கட்சிகள் தாங்களாகவே இராசீவ் அரசைப் பதவி விலகக் கேட்டுக் கொண்டிருந்-தாலும், அதற்கும் குடியரசு அமைப்பில் மக்கள் மதிப்பு உண்டு. ஏனெனில், ஒரு மக்கள் நாயக அரசில் ஆளுங் கட்சிக்கு எவ்வளவு மதிப் புண்டோ, அவ்வளவு மதிப்பு எதிர்க்கட்சி உறுப்-பினர்களுக்கும் உண்டு. அவர்களும் ஆளுங்கட்சி உறுப்பினர்களைப் போலவே பல இலக்கக் கணக்-கான மக்கள் ஆதரவுகளைப் பெற்றே சட்டமன்றங்-களுக்கும் பாராளுமன்றங்களுக்கும் வருகின்றார்கள். எனவே அவர்களுடைய கோரிக்கைக்கும் கண்டனத்திற்கும் மக்கள் மதிப்பு உண்டு.

ஆனால், அவர்களின் எந்த வகையான கருத்துக்கும் கண்டனத்திற்கும் கோரிக்கைக்கும் எவ்வகை மதிப்பும் கொடுக்காமல், பாராளுமன்றத்-தில் தனக்குள்ள ஊழல் உறுப்பினர்களின்-தங்கள் தந்நலன்களுக்காகவே பதவிகளில் ஒட்டிக் கொண்-டிருப்பவர்களின்—பெரும்பான்மையான துணை-யுடன், எதிர்க்கட்சிகளின் நேர்மையான, சட்டப் பொருத்தமான எதிர்ப்புகளையும் திறனாய்வுகளையும் ஒரு சிறு அளவிலும் பொருட்படுத்தாமல், புறக்-கணிப்பதுடன், 'அவை' 'அரசியல் நோக்கம் கொண்டவை' என்றும், 'தேச ஒற்றுமைக்கும் ஒருமைப் பாட்டுக்கும் பகையானவை' என்றும், 'அவர்கள் தேசப் பகைவர்கள், இரண்டகர்கள், எதிரிகளின் கையாள்கள்' என்றும் இழிவு படுத்துவதும் இகழ்வதும், குடியரசு அமைப்புக்கே களங்கம் விளைக்கும், மாசு கற்பிக்கும் செயல்க-ளாகும்; குற்றச் சாட்டுகளாகும்.

எதிர்க் கட்சிகள் தாங்களாகவே இராசீவ் அரசைப் பதவி இறங்கக் கேட்டுக் கொண்டிருந்-தாலும், அதற்கும் மக்கள் ஆதரவு உண்டு என்-பதை ஆளுங்கட்சி உணர்ந்து செயல்பட்டிருக்க வேண்டும். ஆனால் அவையெல்லாவற்றையும் ஒட்டு மொத்தமாக அரசு தனக்குள்ள அதிகார, அகங்காரப் போக்குடன் புறந்தள்ளியே வந்தது.

எனவே இறுதியாகத்தான், அவர்களின் கோரிக்கை மக்களைச் சார்ந்தே இருக்க வேண்டும் என்னும் உயர்ந்த குடியரசு நடைமுறைப்படி ஆகத்து 30-இல் எதிர்க் கட்சிகள் ஒன்று கூடி, முழுக் கடையடைப்புக்கு ஏற்பாடு செய்திருந்தன.

ஆனால், இக் குடியரசு மரபுக் கண்டனத்தைப் பொறுத்துக் கொள்ளாத அரசு, ஆகத்து மாதம் முழுவதும், அக் கண்டனக் கடையடைப்புக்கு எதிராகப் 'பல வகையிலும், அரசுப் பணத்தை வாரியிறைத்து, எதிர்க்கட்சிகளின் முயற்சிகளுக்குத் தன் கையாள்களைக் கொண்டு முழு அடைப்பை முறியடிக்கும் நோக்கத்துடன் எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டதும், தன்னிடமுள்ள, தனக்கே சொந்தமாக்கிக் கொண்ட வலிவான கருத்துப் பரப்புக் கருவிகளாகிய வானொலி, தொலைக்காட்சி ஆகியவற்றின் துணையுடனும் பல முதலாளியக் கட்சித் தலைவர்கள், தொண்டர்கள் ஆகியவர்களின் வலிவுடனும் பொய்யையும், புளுகுச் செய்திகளையும் முறையாகப் பரப்பி, மக்கள் மனங்களில் அச்சத்தையும் அருவருப்பையும் உருவாக்கி வந்தது. இது. குடியரசு மரபுகளை மதிக்காத ஓர் அடாவடித்தனமான போக்காகும். இந்நிலை அது மக்கள் மன்றத்தில் தன் மதிப்பையும் ஆதரவையும் இழந்துவிடத்தான் பயன்பட்டிருக்க முடியுமே தவிர, வேறு எந்தப் பயனுக்கும் உதவி விடாது என்பதை இராசீவ் அரசு உணர்ந்து கொண்டிருக்க வேண்டும்.

இனி, முழு அடைப்பு நாளுக்கு முன்னர் செய்து வந்த பொய்ச் செய்திகள், புளுகுப் பரப்பல்கள் போதாவென்று முழு அடைப்பு நாளிலும் உண்மை ஒன்றிருக்க, பல வகையான புனைசுருட்டுப் போலிச் செய்திகளை வானொலியிலும், தொலைக்காட்சியிலும் சொல்லச் செய்தது, பொய்யாக முன்னரே திட்டமிட்டு அதிகாரிகளையும் கையாள்களையும் கொண்டு எடுத்த காட்சிகளையும் தொலைக்காட்சியில் காட்டச் செய்தது, அவற்றின் வழி நூற்றுக்குத் தொண்ணூறு விழுக்காட்டு அளவில் முழு அடைப்பு (பந்த்) வெற்றிச் செய்தியைத் 'தோல்வி, தோல்வி, முழு அடைப்பு பிசுபிசுத்தது' மக்கள் புறக்கணித்தனர், ஆதரவு அளிக்கவில்லை'' என்று பொய்ச் செய்தியாகத் திரித்துப் பரப்பியது இராசீவ் அரசு.

இத்தகைய தில்லுமுல்லுத் திருவிளையாடல்கள் மூலம், இராசீவ் இந்நாட்டிலுள்ளவர்களை மக்களாகவே கருதவில்லை; மாறாக புழுப் பூச்சிகளாக, ஆடு மாடுகளாகவே கருதுகிறார் என்று வெளிப்படையாகத் தெரிகிறது.

இட்லரின் கோயபல்சைவிட நூறு மடங்கு பொய்யர், இராசீவ். இதுவரை உலக அரசியல் வரலாற்றில் மக்களின் ஞாய உணர்வுகளை மதிக்காமல் நடந்து கொண்ட கொடுமையான அரசியல் தலைவர்கள் வேறெவரையும்விட ஆயிரம் மடங்கு இழிந்து நிற்கும் தனித் தன்மை கொண்டவர் என்பதை மெய்ப்பித்துள்ளார், இராசீவ்!

நடிக்கின்ற முகமும், வஞ்சக நோக்கும், கொஞ்சமும் மக்களுக்காக இரக்கம் கொள்ளாத சூழ்ச்சியான அறிவும், தன் குடும்ப நலத்தையே பெரிதாகக் கொண்டு செயல்படும் கரவான எண்ணமும், மக்களையும் மக்கள் தலைவர்களையும் மதிக்காத அரக்கத்தனமும், மக்களை ஏமாற்றி நாட்டைச் சுரண்டிக் கொழுக்கின்ற—முடிந்தால் காட்டிக் கொடுக்கின்ற கொள்கையும் கொண்டவர் என்பதையெல்லாம், கடந்த மூன்றாண்டுக் கால அவருடைய அரசியல் வரலாற்றில் பல்வேறு நிலைகளில் மெய்ப்பித்து விட்டார், இராசீவ்.

ஓர் ஏமாற்றுக்கார, திருட்டுணர்வு கொண்ட, நாட்டைக் காட்டிக் கொடுக்கும் துணிவுள்ள, சுரண்டும் உணர்வுள்ள ஒருவரின் ஆட்சியில் நாம் இருக்கிறோம் என்பதற்காக வெட்கித் தலைகுனிய வேண்டும்!

இதை மக்கள் உணர்ந்து செயல்பட்டால் எதிர்காலம் அவர்கள் கையில் இருக்கும்! இல்லெனில், இராசீவ் கைகளுக்கே ஆட்பட்டு ஏதாவதொரு வல்லரசுக்கு அடிமையாக்கப்பட்டு விடும் என்பது நூற்றுக்கு நூறு உண்மை!

இந்த உண்மையைத்தான் எதிர்க் கட்சிகளின் முழு அடைப்பின் முழு வெற்றி உறுதி செய்துள்ளது! O

இந்தியாவில் படிப்படியாகப் பாசிசம்:

1) பாராளுமன்ற ஆட்சிமுறையில் தொடர்ந்து ஆட்சி நடத்த முடியாத நிலை உருவாகி வருகிறது. அதனால் குடியரசுத் தலைவர் ஆட்சி முறையைப் புகுத்த ஏற்பாடுகள் செய்யப் பெற்று வருகின்றன.

2) மக்களிடம் பாக்கித்தான், சீனா முதலிய நாடுகளிடம் போர் ஏதம் (அபாயம்) உள்ளதாகக் காட்டி-மக்களிடையில் அச்சமூட்டி ஒரு போர்த் தேவையாகப் படை வலிமையைப் பெருக்கி வருகிறது.

3) அதனால் படிப்படியாக மக்கள் உரிமைகளை நசுக்கும் கருப்புச் சட்டங்களைப் போட்டு வருகிறது.

4) அதிகாரத்திலும் அமைச்சரவையிலும், பாசிச ஆதரவாளர்களை அமைத்து வருகிறது.

5) இவற்றினின்று திசை திருப்ப 13 கொள்கை (அம்ச)த் திட்டங்கள், 20 (அம்ச) திட்டங்கள் என்னும் போலித் திட்டங்களைக் காட்டி மக்களை ஏமாற்றுகிறது.

—'கேடயம்'

Scanned with CamScanner

(முன் இதழ்த் தொடர்ச்சி)

தமிழ் இன விடுதலைக் கழகம் நிறைவேற்றிய தீர்மானங்கள்!

3. மறுநாள் 2-7-89 காலை 10-00 மணியளவில் நடந்த தமிழகப் பொருளியல் சுரண்டல் தடுப்பு மாநாட்டுத் தீர்மானங்கள்:

1. இந்திய நாடு உரிமை அடைந்ததிலிருந்து மெல்ல மெல்ல நடுவண் அரசு அனைத்து அதிகாரங்களையும் தன்னகத்தே தேக்கி வைத்துக் கொண்டு, பல்வேறு தேசிய இனங்களை அடக்கி ஒடுக்கி மாநிலப்பொருளியலைச்சிதைத்துச் சீரழித்து உள்ளதாக இம்மாநாடு குற்றம் சாட்டுகிறது.

2. இந்திய ஆட்சி மேலெழுந்த வாரியாகப் பார்த்தால், ஒரு கூட்டாட்சியாகத் தோன்றினாலும் உண்மையில் அஃது ஓர் அரைகுறை "QUASI" கூட்டாட்சியாகவும், நடைமுறையில் ஒற்றை ஆட்சியாகவும் 'UNITARY' சூழ்ச்சியாக ஆக்கப்பட்டுள்ளது. பொருளியல் அதிகாரக் குவியல் நடுவில் அமைந்து விட்ட காரணத்தால் பல்வேறு மாநிலங்கள் தொழில் வளம் அற்ற பாலைநிலமாகவும் கையறு நிலையில் உள்ளனவாகவும் காட்சி அளிக்கிறது.

எனவே உரிமைக்குப் பின் நாடு வளமுற்று அடித்தள மக்கள் செழுமையாக மேம்பாடு அடைவதற்குப் பகரமாக நாளுக்கு நாள் வறுமைக் கோட்டில் தள்ளப்பட்ட விலங்கு வாழ்க்கையில் உழல்கிறார்கள். தேசியத்தின் பெயரால் வடநாட்டு வணிகக் கும்பல் பன்னாட்டு முதலாளிகளுக்குத் தரகு முதலாளியாக ஆக்கப் பட்டுள்ளது.

இந்த வகையில் தமிழ்நாட்டின் பொருளியல் வரலாற்றை நோக்கினால் ஒரு சிறு தொழிற்சாலை ஏற்படுத்துவதற்குக்கூட நடுவண் அரசிடம் உரிமை பெறவேண்டிய அவல நிலைக்குத்தள்ளப்பட்டு விட்ட இரங்கத்தக்க காட்சியை காணுகிறோம். கணக்குப் போட்டு பார்த்தால் 1-1-89 வரை ரூபாய் 22000 கோடி கொள்ளை அடிக்கப்பட்டுத் தமிழ்நாடு பாலைநிலமாக உள்ளது, எனவே இந்த 22000 கோடியை ஐந்தாண்டுத் தவணையில் திருப்பிக்கொடுக்குமாறு நடுவண் அரசைக்கேட்டுக்கொள்கிறது, இம்மாநாடு.

மேலும், தமிழ்நாட்டில் இருந்து நடுவண் அரசு எடுக்கின்ற கனி வளங்களுக்கு நேர்மையான வகையில் உரிமைத் தொகையும், ஆளுமையிலும், தொழிலிலும் உரிய பங்கையும் அளிக்குமாறு மாநாடு கேட்டுக் கொள்கிறது.

குடிநாயக முறையில் விடுக்கும் இந்த வேண்டுகோளை நடுவண் அரசு நிறைவேற்றத் தவறினால் அதன் பின் விளைவுகளைப் பற்றித் தமிழ் இன விடுதலைக் கழகம் கவலை கொள்வதுடன் இம் மாநாட்டின் மூலம் எச்சரிக்கவும் விரும்புகிறது.

இரண்டாம் நாள் இரவு நடந்த தமிழ் ஈழ விடுதலை மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்:-

இந்திய அமைதிப்படை ஈழத் தமிழர்களைக் காப்பாற்ற வேண்டும் என்ற காரணத்துக்காக இலங்கைக்குச் சென்றதாக வெளி உலகத்துக்கு சொல்லப்பட்டாலும், உண்மையில் இந்திய அரசு தனது வல்லாளுமையை நிலைநாட்டிக் கொள்ளவும், இந்திய வடநாட்டு முதலாளிகளின் பொருளியல் சுரண்டலை நிலைப்படுத்திக் கொள்ளவும் தமிழ் ஈழப் போராட்டத்தை ஒடுக்கவும் இலங்கைக்கு அமைதிப் படையை அனுப்பியது என்ற நிலை வெளிப்படையாகவும், தெளிவாகவும் தெரிந்து விட்ட காரணத்தால் உடனடியாக இந்திய அமைதிப்படை ஈழத்தை விட்டு வெளியேற வேண்டும் என்று இம் மாநாடு கோருகிறது. இந்தியப்படை அங்கே வன்கவர்ப் படையாகக் காட்சி அளிக்கிறது என்பதை உலக ஒன்றிய மன்ற (ஐ.நா.) அவையில் சந்தி சிரிக்க வேண்டாம் என்று இம் மாநாடு எச்சரிக்கிறது. O

தா. பாண்டியன் என்ன விலை கொடுத்தார்? அல்லது என்ன விலை பெற்றார்?

"வல்லரசிய ஆற்றல்களிடமிருந்து நாட்டைக் காக்க அனைத்துப் பொதுவுடைமையாளர்களும் ஒன்றுபடல் வேண்டும்" என இந்தியன் பொதுவுடைமைக் கட்சியின் மாநிலப் பிரிவின் தலைவர் தா. பாண்டியன் கூறினார். (தினமணி. 28-05-89)

வல்லரசியம், இலங்கையில் மூக்கை நீட்டிய இந்தியாவிடம் இல்லையா? இஃது எந்த வகைத் 'தேசியம்' ? இப்போது 'மூக்கறுபட்டுப் போனதே இந்தியா! இந்திய நடவடிக்கைகளை இருகை—நான்கு கைகளை—நீட்டி வரவேற்ற அமெரிக்க—சோவியத்து அரசுகள் 'வல்லரசுகள்' இல்லையோ? சிந்திப்பாரா, தா.பா?

இந்தியாவிற்குள் 'தேசியங்கள்' ஒடுக்கப்படவில்லையா? ஒடுக்கப்படுகின்றதென்றால் 'இந்தியா' வல்லரசா, இல்லையா? ஒடுக்கப்படவில்லை என்றால்...தா. பா விடம் நமக்கென்ன பேச்சு வேண்டிக் கிடக்கிறது?

ஒன்றுபட அறைகூவல் விடும் தா. பா, உடைத்துக் கொண்டு வந்த 'கருத்துக்கு' என்ன விலை கொடுத்தார்? இல்லை. என்ன விலை பெற்றார்?

—பறம்பை அறிவன்.

Scanned with CamScanner

உண்மைக்குப் போராடிய ஒரு போராளியின் உயிர்ப் போராட்ட வரலாறு!

போராளி பார்மர்!

குசராத்து மாநிலத்தில் உள்ள விலலால் என்னும் ஊரில் மீன் பதனிடும் தொழிற்சாலை ஒன்று உள்ளது. அதில் **சசிகாந்த் கேசவலால் பார்மர்** என்பவன் வேலை பார்த்து வந்தான்.

இளைஞனாக உள்ள பொழுதே பார்மர் நேர்மைக்காகப் போராடும் போராட்டக்காரனாக இருந்தான். தன்னுடைய தொழிற்சங்கத்தைச் சேர்ந்த தொழிலாளர்க்காக ஊதிய உயர்வு கேட்டுப் போராட்டம் நடத்தினான். அதனால் 1977-ஆம் ஆண்டு அவன் வேலையை விட்டு வெளியேற்றப் பட்டான். அப்பொழுது அவனுக்கு 26 அகவை.

வேலையை விட்டு நீக்கப்பெற்ற பார்மர் ராசகோட்டில் உள்ள தொழிலாளர் வழக்கு மன்றத்தில் தன்னை மீண்டும் வேலைக்குச் சேர்த்துக் கொள்ளும்படி வழக்காடினான். மூன்று ஆண்டுகளாக நடந்த அந்த வழக்கை உசாவியறிந்து, அவனை மீண்டும் வேலையில் சேர்த்துக் கொள்ளும்படி, தொழிலாளர் வழக்கு மன்றம், அவன் வேலை செய்த தொழிற்சாலை அதிகாரிகளுக்கு உத்தரவு இட்டது. அத்துடன் அவன் வேலையில் இல்லாமலிருந்து வந்த 22 மாதங்களுக்குப் பொதுவான இழப்பீடாக உரு 1000 மட்டும் கொடுத்தால் போதும் என்று அந்த வழக்கு மன்ற நடுவர் தீர்ப்புச் செய்திருந்தார்.

இதை ஞாயமற்றது என்று கருதிய பார்மர் தனக்குக் கிடைக்க வேண்டிய சம்பளத் தொகையைச் சரியாகக் கணக்கிட்டு ஞாயமான இழப்பீட்டுத் தொகையைத் தர வேண்டுமென்றுகோரி, அத் தொழிலாளர் அறமன்றம் முன்பு சாகும் வரை உண்ணாநோன்பு இருக்க முடிவு செய்து தெரிவித்தான். வழக்கு மன்றம் தீர்ப்பில் எந்த மாறுதலும் செய்யாததால்தான் முடிவு செய்தபடி, குறித்த நாளில் உண்ணாநோன்பிருக்கத் தொடங்கினான்.

அதையறிந்த இராசகோட்டு வழக்கறிஞர்கள் கழகத் தலைமை வழக்கறிஞர் **எச். தேவ்** என்பவர் பார்மரைச் சந்தித்து, அவனை ஆறுதல் படுத்தி, அவன் உண்ணாநோன்பைக் கைவிட்டால், தாம் ஞாயமான இழப்பீடு பெற்றுத் தருவதாக உறுதியளித்தார். அவர் பேச்சில் நம்பிக்கை கொண்ட பார்மர், அவர் கேட்டுக் கொண்டது போலவே உண்ணாநோன்பைக் கைவிட்டான்.

அதன் பின்னர், வழக்கறிஞர் தேவ் வழக்குமன்ற நடுவரிடமும் தொழிற்சாலை அதிகாரிகளிடமும் பேச்சு நடத்தி, முன் கொடுத்த இழப்பீட்டுத் தொகை 1000 உருபாவினும் கூடுதலாக உரு. 300 சேர்த்து உரு. 1300 ஆக வாங்கிக் கொடுக்க வழி செய்தார். பார்மர் அதனால் ஏமாற்றமும் சினமும் கொண்டார். வழக்கறிஞர் தேவ் தன் போராட்டத்தைக் கெடுத்து வஞ்சித்து விட்டதாக நினைத்தான். முதலாளிகளுக்கு அவர் சார்பாக நடந்து கொண்டதாக அவர் மீது வன்மம் கொண்டு கொதிப்படைந்து, வழக்கறிஞர் தேவைத் தீர்த்துக் கட்ட எண்ணினான்.

எனவே கத்தியும் கையுமாக வழக்கறிஞர் தேவ் வீட்டை நோக்கிப் போனான். ஆனால் அவர் வீட்டில் இல்லை. அதனால் பழி வாங்கும் அவன் எண்ணம் அடங்கவில்லை. அவ் வீட்டிலிருந்த வழக்கறிஞர் தேவின் தந்தை, அவர் மனைவியின் தங்கை, அவரின் 6 அகவையுள்ள மகள் ஆகிய மூவரையும் கத்தியால் குத்திக் கொன்று தன் வஞ்சினத்தைத் தணித்துக் கொண்டான். கொலை நடந்த நாள் 1980 அக்டோபர் 17-ஆம் நாள்.

இக் கொலைகள் தொடர்பாக அவன் சிறைப் படுத்தப் பெற்றான். கொலை வழக்கு நடந்தது. பத்து மாதம் நடந்த அவ் வழக்கில், 1981 சூலை மாதத்தில் அவன் குற்றம் உறுதி செய்யப பெற்று, அவனுக்குத் தூக்குத் தண்டனை தரப் பெற்றது. அதை எதிர்த்து குசராத்து உயர்நெறி மன்றத்தில் மேல் முறையீடு செய்தான். குசராத்து உயர்நெறி மன்றமும் 1982 சனவரி 19 ஆம் நாள் தூக்குத் தண்டனையை உறுதி செய்து தீர்ப்பு வழங்கியது. இவ் வுயர்நெறி மன்றத் தீர்ப்பையும் எதிர்த்து மீமிசை (சுப்ரீம்) மன்றத்தில் மேல்முறையீடு (அப்பீல்) செய்தான், பார்மர். அம் மீமிசை மன்றமும் 1982 சூலை 27-அன்று அவன் வழக்கைத் தள்ளுபடி செய்தது.

அதன் பின்னர் பார்மர் சார்பில் குடியரசுத் தலைவரிடம் அவர் குடும்பத்தவர் அருள் வேண்டுகை (கருணை மனு) அனுப்பினர்கள். அது 1983 ஏப்பிரல் 9-இல் குடியரசுத் தலைவர் மறுதலித்து விட்டார். இதையடுத்துக் குற்றவாளியாகிய பார்மரே குடியரசுத் தலைவருக்கு நேரடியாக ஓர் அருள் வேண்டுகை மடல் அனுப்பினான். அதையும் குடியரசுத் தலைவர் தள்ளுபடி செய்து விட்டார்.

இந்த இடையீடுகளின் போதெல்லாம், பார்மருக்கு உறுதி செய்த தூக்குத் தண்டனை நாள் 6 முறை உச்சநெறி (மீமிசை) மன்றத்தால் ஒத்தி வைக்கப்பட்டுக் கொண்டே வரப் பெற்றது. ஆனால், பார்மரின் அருள்வேண்டுகை குடியரசுத் தலைவரால் இறுதியாக மறுக்கப்பட்ட பின், பார்மரின் தூக்குத் தண்டனை உறுதி செய்யப் பட்டது.

Scanned with CamScanner

இவற்றுக்கிடையில், பார்மரைத் தூக்கில் போடக் கூடாது. மன்னிக்க வேண்டும் என்று குசராத்து முன்னாள் முதல் அமைச்சர்கள், **கன்சியாம் ஓசா, பாபுபாய் பட்டேல்,** ஆகியோரும், புகழ்பெற்ற நடனக் கலைஞர் **மிருணாளினி சராபாயும்** மற்றும் பலரும், குடியரசுத் தலைவரை வேண்டிக் கேட்டுக் கொண்ட வேண்டுகோள்களும் தவிர்க்கப் பெற்றன. பார்மரைத் தூக்கிலிடுவதைத் தடுத்து நிறுத்த இப்பொழுதைய குசராத்து முதலமைச்சர் **அமர்சிங் சவுத்ரி** எடுத்துக் கொண்ட முயற்சிகளும் வெற்றி பெறவில்லை.

அதன் பின், பார்மரின் தூக்குத் தண்டனையை வாழ்நாள் சிறைத்தண்டனையாகக் குறைக்குமாறு இறுதியாக முன்னாள் முதலமைச்சர் பாபுபாய் பட்டேல் மற்றும் சிலர் உச்சநெறி மன்றத்திற்கு வேண்டுகோள் விடுத்தனர். அதை உசாவிய உச்சநெறி மன்றம் இறுதியாக அவ்வேண்டுகோளையும் தள்ளுபடி செய்தது.

இவ் வரும் பெரும் முயற்சிகளின் முடிவில் இறுதி முயற்சியாக, பார்மரின் தாயார் சார்பில் வேண்டுகை மடல் ஒன்று உச்சநெறி மன்ற இணை நடுவர் உசாவலுக்கு அனுப்பப் பெற்றது. அதை நடுவர்கள் கே. செ. செட்டி, எல். எம். சர்மா ஆகியோர் கடந்த செப்டம்பர் முதல் கிழமையில் ஆய்வு உசாவல் செய்தனர். இவ்வேண்டுகோள் சார்பில் புகழ்பெற்ற வழக்கறிஞர் **ஆர்.கே. கார்க்** வழக்காடினார். அவர் நடுவர்களிடம், "குற்றவாளியின் தூக்குத் தண்டனையை நிறைவேற்றுவதில் நீண்ட காலத்தாழ்த்தம்—ஏறத்தாழ எட்டு ஆண்டுகள்—ஏற்பட்டுள்ளது. இதைக் கருத்தில் கொண்டு, இந்த வேண்டுகோளை இரக்கத்துடன் கவனிக்க வேண்டும்."

"அடுத்து, அவர் செய்த மூன்று கொலைகளும் திட்டமிட்டு நடத்தப்படவில்லை. அவர் திட்டமிட்டுச் செய்திருந்தால், அவர் கொலை செய்ய விரும்பிய வழக்கறிஞர், அவர் வீட்டில் இல்லையென்று தெரிந்து, அவருக்காகக் காத்துக் கொண்டிருந்திருப்பார். ஆனால், எந்த நோக்கமும் இல்லாமல் பெருங் கோப வேகத்தில் வழக்கறிஞர் உறவினர்களைக் கொலை செய்து விட்டார். இஃது உணர்வு வயப்பட்ட கொலையாகையால் அவரை மன்னித்து, வாழ்நாள் சிறைத் தண்டனையாகிலும் வழங்குவதே முறை"—என்று கார்க் வழக்காடினார். நடுவர்கள் இக்கருத்துகளை ஏற்றுக் கொள்ளவில்லை. எனவே, இறுதியாகக் கோரிய அவன் தாயாரின் வேண்டுகையும் தள்ளுண்டு போனது. நடுவர்கள் தூக்குத் தண்டனையை இறுதியாக உறுதி செய்தனர்.

அதன்படி கடந்த செப்டம்பர் 7-ஆம் பக்கல் காலை 6 மணிக்கு இராசகோட் மாவட்டச்சிறையில் சசிகாந்த கேசவலால் பார்மர் தூக்கிலிடப்பட்டான். 6-10 மணிக்கு அவன் உயிர் போய் விட்டதாக சிறை மருத்துவர் உறுதி செய்தார்.

பார்மர் தூக்கிலிடப் படுவதற்கு முந்தின நாள் இரவு 11 மணிக்குத்தான் தூங்கச் சென்றான். அதிகாலையில் 5 மணிக்கு எழுப்பி விட்டனர், பார்மரை! அவன் உடனே குளித்துவிட்டு இறை வழிபாடு செய்தார். சிறையில் பார்மரை வைக்கப் பெற்ற அறையில் இருந்து, 45 அடி தொலைவில் தூக்கு மேடை உள்ளது. சிறையறையிலிருந்து அவன் தூக்கு மேடைக்கு அழைத்துச் செல்லப்படும் பொழுது 5 அடிகள் தான் நடந்திருப்பான். அதன் பின் அப்படியே உட்கார்ந்து விட்டான். பிறகு நான்கு காவலர்கள் அவனைத் தூக்கிச் சென்றனர். தூக்கிலிடப் பெறுவதற்கு முதல்நாள் வழக்கமாக அவன் அறையைக் காவல் காத்துக் கொண்டிருந்த இரண்டு காவலர்களிடமும், "இனி மேல் நீங்கள் என்னைக் காவல் புரிய வேண்டியது இருக்காது" என்று தெரிவித்தான். அத்துடன் தன்னை இறுதியாகப் புகைப்படம் எடுக்கவும் அவன் இசைய மறுத்து விட்டான். 'என் முகத்தைக் கடவுளைத் தவிர வேறு யாரிடமும் காட்ட விரும்பவில்லை' என்று கூறி விட்டான். பார்மரின் தூக்குத் தண்டனைதான், குசராத்து மாநிலத்தில் கடந்த 25 ஆண்டுகளுக்குப் பிறகு முதன் முதலாக நிறைவேற்றப்பட்ட தூக்குத் தண்டனையாகும்.

பார்மரின் பொதுவுணர்வு வியக்கத்தக்கது. போராட்டவுணர்வு மிக்கிருந்த அவனுக்கு இருந்த மக்களுணர்வு (மனிதாபிமானம்) மிகவும் பாராட்டத் தக்கது.

சிறையில் இருந்த காலத்தில், தன்னுடைய சிறுநீரகங்களில் ஒன்றை அன்பளிப்பாக ஒருவருக்குக் கொடுத்து விட்டான். அவர் மிகப் பெரிய ஒரு தொழில் முதல்வர். ஆனால் ஏழையான பார்மர் தன்னுடைய சிறுநீரகத்துக்காக ஒரு காசு கூட அவரிடமிருந்து வாங்கவில்லை. அத்துடன் தான் இறந்த பின் தன்னுடைய கண்கள் இரண்டையும் எடுத்துக் கண்ணிழந்தவர்களுக்குப் பொருத்தும் படி கொடையாக அளித்துவிட்டான். அதோடு, தன் உடலையும் சாம்நகர் மருத்துவக் கல்லூரிக்கு ஆய்வுக்காக எழுதிக் கொடுத்து விட்டான். அதே போல், அவன் இறந்த பின் அவன் விருப்பப்படி அவன் உடலும், உறுப்புகளும் மருத்துவமனையில் ஒப்படைக்கப் பெற்றன.

இனி, இவற்றுக்குமேல் பார்மர் இறக்கும் முன் செய்த சிறந்த பொதுப்பணி ஒன்று வரலாற்றில் இடம் பெறத் தக்கது. அதுதான் அவன் தன் கடைசி விருப்பாக, அம்மாவட்டக் கூடுதல் அறமன்ற நடுவருக்கு எழுதிய 24 பக்க மடல். அந்த மடலை நடுவர் வழக்கு மன்றத்தில் எல்லார் முன்னிலையிலும் படிக்க வேண்டும் என்பது அவன் கடைசி விருப்பமாகத் தெரிவித்திருந்தான். எனவே அவன் விருப்பத்தை நிறைவேற்ற வேண்டியதாகப் போயிற்று. (தொடர்ச்சி 12-ஆம் பக்கம்)

Scanned with CamScanner

(2-ஆம் பக்கத் தொடர்ச்சி)

யர்கள் கூட இல்லாமல் பெருமளவில் பணம் திரட்டுகின்றனர். இது குறித்து அரசு பல்கலைக் கழகங்களின் மூலமாக நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

(3) மக்கள் தொகை அதிகரித்து வரும் சூழ்நிலையில் கல்விக்காக அரசு மட்டுமே பணி-யாற்றுவது என்பது இயலாத செயலாக உள்ளது. அரசுக்கு உறுதுணையாகத் தனியார் பள்ளிகள் தொடங்க முன்வரும்போது அதை ஊக்கப் படுத்த முன் வருகிறோம்.

4) தனியார் கல்வி நிறுவனங்களைத் தொடங்க முன் வரும் போது-தேன் எடுக்கும்போது கையில் சிந்தும் தேன் அளவில்தான் தனியார் ஆதாயத்தைப் பெற நினைத்தல் வேண்டும். ஆனால் தேனெடுக்கிற ஆள் தேனடையையே கொண்டு போய் விட்டார் என்ற மாதிரி இருக்கக் கூடாது.

(5) பொறியியல் கல்லூரி ஒன்றில் கடந்த ஒன்றரை ஆண்டுகளாக ஆசிரியர்களோ, ஊழியர்-களோ கூட வேலைக்கு அமர்த்தப்படவில்லை. இடம் கூட எதுவும் இல்லை. ஆனால், இலக்கம் இலக்க-மாகப் பணம் வாங்கிக் கொண்டு மாணவர்களை இந்தக் கல்லூரிகளில் சேர்த்து இருக்கிறார்கள். எதிர்காலக் குமுகாயத்தைப் பாழ்படுத்தும் இந்தப் போக்கைத் தடுத்து நிறுத்தல் வேண்டும்.

(6) ஆரியர், திராவிடர் பழங்கால வரலாற்-றுச் செய்திகளை ஆங்கிலேயர் மட்டும்தான் கூறி-னார்கள் (இப்படிக் கூறியவர் சென்னை நடுப் பிரிவுத் தலைவர் நாராயணன்) என்று சொல்ல முடியாது. பழம் பெரும் வரலாற்று ஆசிரியர்கள், பேராசிரி-யர்கள் அது குறித்துக் கூறியுள்ளனர்.

(7) பழங்கால விளத்தங்களை (விஷயங்களைக்) குமுகாய எழுச்சிக்கு—புரட்சிக்குப்—பயன்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

(8) பழைய வரலாறுகளை மூதுரைகளை உர-மாக எண்ணிப் புதுமைகளை உரமாக எண்ணிப் புதுமைகளை உருவாக்கிடல் வேண்டும்.

(9) மூட நம்பிக்கையை ஒழிப்பது, சாதி மத வேற்றுமை ஒழிப்புப் போன்ற ஆரிய சமாசத்தின் கொள்கைகள் தி.மு.க.விற்கு உகந்தவைதாம்.

மேற்கூறிய கருத்துகளை நாம் உன்னிப்பாக எண்ணிப் பார்த்தால் உண்மைகள் என்று நான் கருதுவனவற்றை உங்கள் சிந்தனைக்கு வைக்கின்-றேன்.

அ) தனியார் கல்வி நிறுவனங்கள் வணிகக் கூடங்கள் ஆகி வருகின்றன.

ஆ) வாணிகம் 'வள்ளுவர் காட்டிய வழியில்' நடக்கலாம். அதிக 'ஆதாயம் கூடாது.

இ) 'தேன்' எடுக்கலாம்; 'அடை'யைக் கொண்டுபோய் விடுதல் கூடாது.

ஈ) பங்கு போட்டுத் தின்னலாம்: 'கொள்ளை' போகக் கூடாது.

உ) பாலுக்குக் காவலும் நானே; பூனைக்குத் தோழனும் நானே.

முடிவு: கலைஞர் பட்டறிவு மிக்கவர்.
நல்ல பெயரை நாடுபவர்.
ஆனாலும், மாற்றம்—புரட்சியை
அவர்'பதவி' மூலம் நடத்த விரும்புகிறவர்.
எனவே, கல்வித்துறை பத்தோடு
பதினொன்றுதான்!

சென்னைப் பல்கலைக்கழகத்தின் 132 ஆவது பட்டமளிப்பு விழாவில் முதல்வர் கலைஞர் பேசு-கிறார். அதையும் கேட்போம். (தினமணி 6-9-89).

1. தரமான கல்வி தருவதில் ஆசிரியர்கள் தங்களுடைய பொறுப்பை உணர்ந்து செயலாற்றல் வேண்டும்.

2. அனைத்திந்திய அளவிலான போட்டித் தேர்வுகளில் நமது மாணவர்களின் சரிவினைத் தடுத்து நிறுத்திக் கல்வித் தரத்தை உயர்த்துவது ஆசிரியர்களின் கடமையாகும்.

3. கல்வி கற்கச் சூழல் இல்லாத வீடுகளி-லிருந்து வரும் மாணவர்கள் மீது தனிக் கவனம் தேவை. இதை உணர்ந்து ஆசிரியர்கள் செயல்-படல் வேண்டும்.

உயிர் வேதியியல் துறையில் உயர் ஆராய்ச்சி ஆய்வறிக்கைகளைத் தமிழில் தந்த சிறப்பு சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு உண்டு. இந்த முயற்சி மேலும் பல துறைகளுக்கும் பரவல் வேண்டும்.

5. தமிழால் முடியும்; ஆனால் தமிழரால் முடிய வில்லை என்ற அவச் சொல்லிலிருந்து விடுபடல் வேண்டும்.

6. தமிழ்நாட்டில் ஆண்டுதோறும் 4 இலக்கம் மாணவர்கள் உயர்கல்வி பெறக் கல்லூரிகளிலும், பல்கலைக் கழகங்களிலும் சேருகின்றனர். இவர்க-ளில் 40 % பெண்கள். ஆனால், உயர்கல்வி படித்துப் பட்டம் பெறுபவர்களில் 60% பெண்களாயிருப்பது பெண்ணினத்திற்குப் பெருமை.

7. மக்கள் நலத்துறைகளில் பணிபுரிபவர்க-ளின் எண்ணிக்கை பெருகி வருவதால், இந்த மாதிரியான பணிகளில் ஈடுபடுபவர்களுக்குத் தொண்டுள்ளம் அமைந்திடும் வகையில் கல்வி, அறிவியல் பாடங்களைப் பல்கலைக் கழகங்கள் வகுத்துத் தரல் வேண்டும். சென்னைப் பல்கலைக்கழ-கம் இந்தத் துறையில் முன்னின்று பிறருக்கு வழி-காட்டல் வேண்டும். இந்த முயற்சியில் பல்கலைக்-கழகத்துக்கு அரசு வேண்டிய உதவிகள் செய்யும்.

8. தொழிற் கூடங்களுக்கும் பல்கலைக் கழகங் களும் நல்லுறவு வளர்ந்திட வேண்டும்.

9. தொழில்துறைச் சிக்கல்களைத் தீர்க்கப் பல்கலைக் கழகங்கள் உதவுதல் வேண்டும்.

10. தொழில் துறையோடு, தொழில் நுணுக்-கப் பல்கலைக் கழகங்கள் நெருங்கிய தொடர்பு கொள்ளல் வேண்டும்.

Scanned with CamScanner

தருவது அரசு ஆற்றி வரும் குமுக அறப்பணி.

12. பிறருக்குச் சரிநிகராகப் போட்டியிடவல்ல திறனை வளர்க்காத போது இடஒதுக்கீடு நோக்கமே நிறைவேறாமல் போகிறது.

13. சாதி, சமய மோதல்களைக் குறைப்பது மட்டுமன்று; இல்லாததாக்கி விடல் வேண்டும்-

இக் கலைஞர் கருத்துரையின் உள்பொருள்?

தமிழின வாழ்வு நல்வி, பெண் முன்னேற்றம், தொழில் துறைச் சிக்கல் தீர நுட்பக் கல்வி பற்றிய சிந்தனை, தமிழால் முடியும் என்பதை உணர்த்தும் ஆர்வம் வெளிப்படுகின்றது. ஆனாலும், 'கல்வி தனியுரிமை' ஆகி விடும் அச்சம் பற்றியும் வணிகமாக்கி வரும் தனியார் கல்வி நிறுவனங்கள் மீதும் கலைஞர் போதிய கருத்துச் செலுத்துதல் வேண்டும் என்றாலும் கலைஞரின் ஆர்வமெல்லாம் வீணடிக்கப்பட்டுவிடும், தனியார் கல்வி நிறுவனங்களால்! O

(10-ஆம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த 7-9-89-ஆம் நாளன்று இராசகோட் அறமன்றத்தில் கூடுதல் மாவட்ட நடுவர் ஆர்.எசு. உபாத்தியாயா 24 பக்கமுள்ள அக்கடிதத்தை முழுவதும் படித்தார். அந்த மடலை நடுவர் படிக்கும் பொழுது அறமன்றம் நிறைந்திருந்தது. செய்தியாளர்கள், வழக்கறிஞர்கள், பொது மக்கள் நிரம்பியிருந்தனர். அத்துடன் சசிகாந்த் பார்மரின் கைம்பெண் தாயார் **திரிவேணி பென்**, அண்ணன் **அரிகிசன்** ஆகியோரும் உடனிருந்தனர்.

பார்மரின் அந்தக் கடிதத்தில் அரசியல் ஊழல்கள், ஆளுமைச் சீர்கேடுகள், அறக்கொடுமைகள், சாதியம், ஏழை மக்கள் படும் இன்னல்கள் ஆகியவை பற்றிய திறனாய்வுகளை விரிவாக எழுதியிருந்தான். அறத்துறை, காவல்துறை, செய்தியாளர்கள் ஆகிய அனைவரையும் அந்தக் கடிதத்தில் சாடியிருந்தான். அக்கடிதத்தை படித்த கூடுதல் மாவட்ட நடுவர் ஆர். எசு. உபாத்தியாயா கூட அவரது தாக்குதலுக்குத் தப்பவில்லை.

அந்தக் கடிதத்தில் சிறைச்சாலையில் அதிகாரிகளின் துணையுடன் சூதாட்டம், சாராயம், மகளிர் தீயொழுக்கக் கேடுகள் போன்ற அனைத்துக் குமுகாயக் குற்றங்களும் நடப்பதாகப் பார்மர் கண்டனம் தெரிவித்துள்ளார்.

காவல்துறை பணக்காரர்களின் கருவியாகி விட்டதென்றும், ஏதுமறியாத ஏழை எளிய மக்களுக்கு எதிராகச் சட்டத்தைத் தங்கள் விருப்பப்படி காவலர்கள் வளைக்கின்றனர்-என்றும் குற்றம் சாட்டியிருக்கின்றான்.

மக்கள் ஞாயம் கிடைக்குமென்று இந்தக் கால அறமன்றங்களை நம்பியிருக்க வேண்டாமென்றும், இயன்ற வரை அறமன்றங்களுக்கு வெளியிலேயே ஞாயம் (நீதி) தேடிக் கொள்ள வேண்டுமென்றும் அவன் கூறியுள்ளான். செய்தித்தாள்களைப் பற்றிக் குறிப்பிடுகையில், செய்தியாளர்கள் மக்களைத் தவறான பாதையில் இட்டுச் செல்வதாயும் பார்மரின் கடிதம் கூறுகிறது.

பார்மரின் இறுதி ஆசைப்படி அந்தக் கடிதம் அவருடைய தலைமையாளரிடம் ஒப்படைக்கப் பெற்றது. (அம்மடல் முழுவதையும் **தமிழ்நிலத்தில்** பின்னர் வெளியிட முயற்சி மேற்கொள்ளப்பெறும்.)

ம.தி.மு.க.வின் உயர்ந்த கொள்கைகள்!

தூய்மையான தமிழ்மொழி முன்னேற்றம்!

சாதியற்ற, மத வேறுபாடற்ற சமநிலைக் குமுகாயம்!

இழிவுகளும், பூசல்களும், ஏமாற்றும் இல்லாத அரசியல்!

தமிழ்த் தேசிய இனத்திற்குப் பொருந்திய பொதுவுடைமைப் பொருளியல்!

மனம், அறிவு, வாழ்க்கை இவற்றை வளப்படுத்தவும், நலப்படுத்தவுமான அருவருப்பற்ற கலை வளர்ச்சி!

பழந்தமிழ் மரபுக்கும், மாந்தவியல் சிறப்புக்கும் ஒத்த பண்பாட்டுப் பரிமாற்றம்!

எல்லாவற்றிலும் காலத்திற்கேற்ற அறிவியல் அணுகுமுறை!

சிந்தனைக்கு - 45

...பாட்சியில்தான் ஆட்சியாளர்க்கு மதிப்பு; ...பாட்சியில் மக்கள் குரலுக்குத்தான் முதல் ...புத் தர வேண்டும்!

(மாதம் இருமுறை வெளிவரும்) இதழ் எண்- 128.

நூல் அஞ்சல்

பெறுநர்:

திரு. / திருவாட்டி

அனுப்புதல்:

தமிழ்நிலம்

5. அருணாசலத் தெரு

திருவல்லிக்கேணி, சென்னை-5

தொலைபேசி எண்: 847829;

உறுப்பினர்:

தனி இதழ் விலை	உரு. 1-00
ஆண்டுக் கட்டணம்	உரு. 50-00
அரையாண்டுக் கட்டணம்	உரு. 25-00

ஆசிரியரும், வெளியிடுபவரும்: பாவலரேறு பெருஞ்சித்திரனார்.

அச்சிடுவோர்: தென்மொழி அச்சகம், 5, அருணாசலத் தெரு, சென்னை-5;

TN/MS (C) 657